தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை.

1984, மார்ச் 30, வெள்ளிக்கிழமை.

பங்குனி 17, ருத்ரோத்காரி—திருவள்ளுவர் ஆண்டு 2015.

சென்னை செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்டமன்றப் பேரவை மண்டபத்தில் காலை 9-00 மணி அளவில் மாண்புமிகு பேரவைத் தலைவர் திரு. க. இராசாராம் அவர்கள் தலைமையில் பேரவை கூடிய .

மாண்புமிகு பேரவைத் தலைவர் :

'' உறுப்பமைந்து ஊறஞ்சா வெல்படை வேந்தன்
வெறுக்கையுள் எல்லாம் தலை .''

எல்லா உறுப்புக்களும் நிறைந்ததாய், இடையூறுகளுக்கு அஞ்சாததாய் உள்ள வெற்றி தரும் படை, அரசினுடைய செல்வங்கள் எல்லாவற்றிலும் சிறந்தது ஆகும்.

1. வினாக்கள் —விடைகள்.

உடுக்குறியிட்ட வினாக்கள்.

யுரேனியத்தைப் பயன்படுத்தி அணுமின் நிலையம் ஆரம்பிக்கும் திட்டம்

510—(*வினா 20173) திரு. செ. செம்மலை : மாண்புமிகு மின்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழ்நாட்டில் யுரேனியத்தைப் பயன்படுத்தி அமைக்கப்படும் அணு மின்நிலையத்தை ஆரம்பிக்க மைய அரசு முன் வந்துள்ளதா ?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன ?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : (அ) இல்லை.

(ஆ) இக் கேள்விக்கு இடமில்லை.

திரு. செ. செம்மலை : தலைவரவர்களே, பாரதப் பிரதமர் திருமதி இந்திரா காந்தி அவர்கள் நம்முடைய நாட்டில் கிடைக்கின்ற யுரேனியத்தை பயன்படுத்தி வெளிநாட்டு உதவியுடன் ஒரு அணு மின் நிலையத்தை நம்முடைய நாட்டில் அமைக்க-

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
TRUTH ALONE TRIUMPHS

இருப்பதாக பத்திரிகையில் செய்தி சொல்லியிருக்கிறார்கள். அப்படி ஒருவேளை யுரேனியத்தைப் பயன்படுத்தி வெளிநாட்டு உதவியுடன் அமைக்கும்போது, அப்படிப்பட்ட அணுமின் நிலையத்தை நம்முடைய தமிழ்நாட்டில் கிடைக்கின்ற யுரேனியத்தைப் பயன்படுத்தி, தமிழ்நாட்டில் அமைக்க நம்முடைய அரசு மத்திய அரசை வற்புறுத்துமா ?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : தலைவரவர்களே, யுரேனியத்தைப் பயன்படுத்தி மின் உற்பத்தி செய்யக்கூடிய ஆராய்ச்சி Fast Breeder Reactor என்ற அளவில் கல்பாக்கத்தில் நடைபெற்று வருகிறது. யுரேனியத்தைப் பயன்படுத்தி வெளிநாட்டு உதவியுடன் அணுமின் நிலையம், அமைக்கும் தகவல்பற்றி என்னிடம் விவரம் இல்லை. இருப்பினும் அணுமின் நிலையம் ஒன்று தமிழ்நாட்டில் அமைக்கப்பட வேண்டுமென்று நமது அரசு இந்திய அரசை வற்புறுத்தி வருகிறது.

திரு. செ. செம்மலை : தலைவரவர்களே, கல்பாக்கம் அணுமின் நிலையத்தில் உற்பத்தியாகின்ற மின்சாரத்தை முழுமையாக நம்முடைய தமிழ் நாட்டுக்குக் கொடுக்க வேண்டுமென்று நம்முடைய அரசு வற்புறுத்தி வந்ததே, அதற்கு மத்திய அரசு ஒத்துக்கொண்டிருக்கின்றதா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : தலைவரவர்களே, அது மத்திய அரசின் ஆய்வில் உள்ளது.

திரு. கு. ரமணி : தலைவரவர்களே, தமிழ்நாட்டில் திருநெல்வேலி மாவட்டத்தில் அடுத்த அணுமின் நிலையத்தை உருவாக்குவதற்கு மத்திய அரசினுடைய பரிசீலனைக் குழு வந்து பரிசீலனை செய்துவிட்டுப் போயிருக்கிறது என்றும் அதை நம்முடைய அரசு வற்புறுத்தி வருகிறது என்றும் 2,000 மெகாவாட் உற்பத்தியாகும் அணுமின் நிலையம் தமிழ்நாட்டுக்குக் கிடைக்க வேண்டிய முயற்சிகளை மேற்கொண்டிருக்கிறோம் என்றும் ஒருமுறை அமைச்சரவர்கள் பதில் சொல்லியிருக்கிறார்கள். இப்போது அந்தப் பிரச்சினை எந்த நிலையில் இருக்கிறது ? அதை நிச்சயமாக தமிழ்நாட்டிற்கு, தெற்குப் பகுதிக்குத் தருகின்ற நிலைமை இல்லை என்று பாராளுமன்றத்தில் பதில் சொல்லியிருக்கிறார்கள். அதன் உண்மையான நிலை என்ன என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : தலைவரவர்களே, 2,000 மெகாவாட் என்று நான் சொன்னதாக மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொல்வது சரியல்ல. அணுமின் நிலையத்தைப் பொறுத்தவரையில் அந்த அளவுக்கு அதிகரிக்கும் நிலைமை இல்லை. ஆனால் இந்த நூற்றாண்டின் இறுதிக்குள் 10,000 மெகாவாட் அணுமின் நிலையங்கள் மூலம் உற்பத்தி

1984 மார்ச் 30]

செய்ய வேண்டுமென்று இந்திய அரசு விரும்புகிறது. திருநெல்வேலி மாவட்டத்தில் கூடங்குளம் பகுதியில் ஒரு அணுமின் நிலையத்தை அமைக்க வேண்டுமென்று நாம் இந்திய அரசை வற்புறுத்தி வருகிறோம். அதற்கான இடத்தையும் பார்த்தாகி விட்டது. பாராளுமன்றத்தில் திரு. இரா. மோகன் என்ற தி.மு.க. உறுப்பினரின் கேள்விக்குப் பதில் அளிக்கும்போது இவ்வாறு சொல்லப்பட்டது.

The Committee set up by the Centre was examining various sites and a decision would be taken after it submits its report,— He told Mr. Era Mohan and Dr. A. Kalanidhi. Mr. Era Mohan said, the State plan document had stated that a site in Tirunelveli had been selected for an atomic power plant. Since the Centre had not made any such choice, he wanted to know whether the Tamil Nadu Chief Minister would be asked to delete this portion from the plan document. Mr. Patil said, it was not for him to make any such suggestion to the Chief Minister.

டெலீட் பண்ணவேண்டுமென்று நாம் கேட்காமல் இருந்தால் போதுமானது.

திரு. மி. வின்சென்ட் : தலைவர் அவர்களே, யுரேனியம், டைட்டானியம், சிலிகான், மானோசைட் போன்ற மூலப்பொருள்கள் இந்தியாவிலேயே, தமிழ்நாட்டிலுள்ள குமரி மாவட்டத்தில் தான் கிடைக்கின்றன. ஆகையால் இங்கே அணுமின் நிலையத்தை அமைப்பதற்காக, மத்திய அரசை மாநில அரசு வற்புறுத்துமா ?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : தலைவர் அவர்களே, எவ்வளவு கட்டாயம் வற்புறுத்த முடியுமோ, அவ்வளவு கட்டாய்மாக வற்புறுத்துகிறோம்.

திரு. ரா. கிருஷ்ணன் : தலைவர் அவர்களே, இன்றைக்குத் தமிழ்நாட்டில் மட்டுமல்லாமல், இந்தியாவைப் பொறுத்தவரையில், தொழில் வளர்ச்சிக்கும், மற்ற வளர்ச்சிக்கும், மின்சாரம் அவசியம் என்பதை எல்லோரும் அறிவோம். இப்போது தமிழ்நாட்டில் மின்சாரம் பற்றாக்குறையாக இருக்கிறது. கூடங்குளம் அனல் மின் நிலையத்தைப் பற்றி 10, 12 ஆண்டுகளாகப் பேசக் கூடிய பிரச்சினையாக இருக்கிறது. கூடிய விரைவிலேயே இந்தத் திட்டத்தை நிறைவேற்றுவதற்குத் தமிழக அரசு முழு மூச்சுடன் நடவடிக்கை எடுக்குமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : இதிலே ஒரு சிக்கல் இருக்கிறது. போதுமான நீர் வசதியில்லை. பச்சைமலை ஆற்றில் தற்போது வெள்ளம் நிறைய வந்து, நீர் வசதி இருக்கின்றது என்று நிரூபித்திருப்பதால், நீர் வசதி இருக்கிறது என்று சொல்லி, திரும்பவும், கூடங்குளத்தைப் பொறுத்தவரையில் வற்புறுத்தி வருகிறோம்.